# Tamilnadu Pollution Control Board

## Press Release

**Press Release regarding Cancellation of Public Hearing in respect the Construction of 8- lane of Bangalore – Chennai Expressway Phase –III by M/s. National Highways Authority of India (NHAI).**

Public Hearing has been proposed to conduct for the Proposed construction of Bangalore – Chennai Expressway project Phase – III in the District of Ranipet in the State of Tamil Nadu from km 179.670 - km 221.900 (42.230 km) by M/s. National Highways Authority of India (NHAI) under the Chairmanship of the District Collector, Ranipet on 13.03.2021 @ 11.00 A.M. at Panchayat Union Elementary School, Banavaram, Kaveripakkam Taluk, Ranipet District.

In mean time, The Model Code of Conduct (MCC) laid down by the Election Commission of India in Tamilnadu comes into effect soon as the dates for the elections are announced; it has been postponed. The date of public hearing meeting will be intimated later.

**District Collector,**
**Ranipet District.**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## பொது அறிவிப்பு

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் முன்மொழியப்பட்ட தமிழ்நாடு இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமையவுள்ள பெங்களூர் - சென்னை அதிவேக நெடுஞ்சாலை திட்டம் ஃபேஸ் - III (கிலோ மீட்டர் 179.670 – 221.900) (42.230 கிலோ மீட்டர்) திட்டத்திற்கு சுற்றுச் சூழல் அனுமதி பெறுவதற்காக பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் தாலுக்கா, பானாவரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 13.03.2021 அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் தலைமையில் நடைபெறுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழகம் முழுவதும் தேர்தல் விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட தேதியில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டமானது ஒத்திவைக்கப்படுகிறது. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

### தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம் எடுப்பு தொடர்பான

# கருத்து கேட்பு கூட்டம் தள்ளிவைப்பு

ராணிப்பேட்டை

சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம் எடுப்பு தொடர்பாக நடைபெற இருந்த பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் மறு தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது என ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "ராணிப்பேட்டை மாவட்டத்தில் அமையவுள்ள சென்னை-பெங்களூரு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் பாணாவரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் வரும் 13-ம் தேதி (சனிக்கிழமை) காலை 11 மணியளவில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது; சட்டப்பேரவைத் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் மறு தேதி குறிப்பிடப்படாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.